# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1694/5 - 2011 පෙබරවාරි 23 වැනි බදාදා - 2011.02.23

*1694/5 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 23 ஆந் திகதி புதன்கிழமை*

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ.- 11/80.*

***1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க உணவுச் சட்டம்***

*1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் உணவு ஆலோசனைக் குழுவின் கலந்தாலோசனையுடன் சுகாதார அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

*மைத்திரிபால சிறிசேன,*
*சுகாதார அமைச்சர்.*

*சுகாதார அமைச்சு,*
*கொழும்பு,*
*2011, சனவரி 31.*

**ஒழுங்குவிதிகள்**

*1. இவ்வொழுங்குவிதிகள் 2011 ஆம் ஆண்டின் உணவு (இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்கள் பயனுகர்தகு காலம்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன், 2011, ஓகத்து 1 ஆந் திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.*

*2. இலங்கையினுள் இறக்குமதி செய்யப்பட்ட எல்லா உணவுப் பொருட்களும் இலங்கையினுள் நுழையும் நேரத்தில் பயன்நுகர்தகு காலத்தின் குறைந்தது அறுபது சதவீதமான (60%) காலாவதியாகாத பயன்நுகர்தகு காலம் ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.*

*ஆயினும், மேலே குறித்துரைக்கப்பட்ட பயன்நுகர்தகு காலம் இறக்குமதி செய்யப்பட்ட உடன் பழங்கள், காய்கறிகள் மற்றும் உரிக்கப்படாதிருக்கின்ற அல்லது வெட்டப்படாதிருக்கின்றதான உருளைக்கிழங்கு தொடர்பில் வலுவுறுத்தப்படுதல் ஆகாது.*

*3. இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருள் ஒன்றின் பயன்நுகர்தகு காலப்பகுதி, உற்பத்திப் பொருட்களுடன் இணைக்கப்பட்ட சுட்டுத்துண்டின் மீது காட்டப்பட்டிருக்கின்றதும் மற்றும் உற்பத்தியாளரினால் வெளிப்படுத்தப்பட்டதுமான உற்பத்தித் திகதி மற்றும் உற்பத்திப் பொருளின் காலாவதியாகும் திகதி என்பவற்றின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.*

*4. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காக "பயன்நுகர்தகு காலத்தின் முடிவு" என்ற சொல்லமைப்பு இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்படும் ஏதேனும் உணவுப் பொருளின் உற்பத்தியாளர் ஒருவரால் பயன்படுத்தப்படுகின்றதான "காலாவதியாகும் திகதி", "திகதிக்கு முன் பாவனைக்கு உகந்தது", "பயன்படுத்தல் திகதி" அல்லது "திகதிக்கு முன் பயன்படுத்துதல்", அல்லது இக்கருத்தைக் கூறும் இவற்றையொத்த வேறு சொற்களைப் பயன்படுத்துவதன் மூலம் இனங்காணப்படுதல் வேண்டும்.*

*5. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்திற்காக "பயன்நுகர்தகு காலம்" என்பது உற்பத்தித் திகதிக்கும் பாவனையாளரால் பயன்படுத்தத்தக்கதான திகதிக்கும் இடையிலான காலப்பகுதி எனப் பொருள்படும் என்பதுடன், அக்காலப்பகுதியின் போது உற்பத்திப் பொருள் மனித நுகர்விற்கு காப்பானதாகவும் மற்றும் போசணைப் பெறுமதி, சுவை, தன்மை. தோற்றம் என்பவற்றில் திருப்திகரமான தரத்தைக் கொண்டிருக்கும் எனவும் பொருள்படும்.*

*3- 246*


*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*